**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

C.O.S. 11/2022

**Deposition of the witness:** D.W. **4**

Solemnly affirmed by Thiru/Tmt Bench Clerk in accordance with the provision of Act X of 1873.

| | | |
|---|---|---|
| Name | : | **திரு. சிவநாதன்** |
| Father's Name | : | P. Arumuga Perumal |
| Village | : | **Tuticorin** |
| Taluk | : | **Tuticorin** |
| Calling | : | Senior Manager, Indian Bank |
| Age | : | 41 |
| Date | : | 16.04.2026 |

**முதல் விசாரணை:-**

நான் இந்த நீதிமன்றத்தின் அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க ஆஜராகியுள்ளேன். நான் இந்தியன் வங்கி நாகர்கோவில் கிளையின் ஆகஸ்ட் 2023 லிருந்து மே 2024 வரை கிளை மேலாளராக பணிபுரிந்து வந்தேன். என்னுடைய அடையாள அட்டையின் நகலை தாக்கல் செய்கிறேன். **அது எக்ஸ் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

நான் நாகர்கோவில் கிளை வங்கி மேலாளராக இருக்கும்போது 12.01.2024 அன்று STC No. 110/2020 என்ற வழக்கில் குற்றவியல் நடுவர் விரைவு நீதிமன்றம் நாகர்கோவிலில் புகார்தாரர் தரப்பு சாட்சி 3 ஆக சாட்சியம் அளித்தேனா என்றால் ஆமாம்.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 9, 10, 11, 12 மற்றும் 13 காசோலைகளின் அசலை அப்போது என்னிடம் காண்பிக்கப்பட்டு அதை பார்த்து நான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். அந்த காசோலை எண்கள். 954682 மற்றும் 954683 ஆகியவை ஒரே காசோலை புத்தகத்திலிருந்து வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

595053, 595054 ஆகிய இரண்டு காசோலைகளும் ஒரே காசோலை புத்தகத்திலிருந்து வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

035300 என்ற காசோலை மற்றொரு காசோலை புத்தகத்திலிருந்து வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

இந்த ஐந்து காசோலைகளும், மூன்று காசோலை புத்தகத்திலிருந்து வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

595053, 595054 ஆகிய இரண்டு காசோலைகளும் அடங்கிய காசோலை புத்தகம் 04.10.2014 அன்று வழங்கப்பட்டதாக நான் அந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

954682 மற்றும் 954683 ஆகிய இரண்டு காசோலைகளும் அடங்கிய காசோலை புத்தகம் 07.05.2012 அன்று வழங்கப்பட்டதாக நான் அந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

035300 காசோலை அடங்கிய காசோலை புத்தகம் 04.05.2013 அன்று வழங்கப்பட்டதாக நான் அந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஐந்து காசோலைகளின் மொத்த தொகை ரூபாய் 1,85,00,000/- என்றால் சரிதான்.

ஐந்து காசோலைகளிலும் 20.03.2020 என்ற தேதிதான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரூபாய் 1,85,00,000/- த்திற்கு ஒரே காசோலையாக கொடுத்திருந்தாலும் வங்கி அதை ஏற்றுக்கொண்டிருக்கும் என்றால் சரிதான். இந்த ஐந்து காசோலைகளிலும் எங்கள் வங்கி வாடிக்கையாளரின் பெயர் அச்சடிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

மிகவும் பழைமையான காசோலைகளை பயன்படுத்தி காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்பது இந்த காசோலைகளை பார்த்தால் தெரியும் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்):-**

மேற்சொன்ன ஐந்து காசோலைகளும் எங்கள் வங்கியில் ஆசீர்வாதம் நாடார் சன்ஸ் என்ற நிறுவனத்தின் நடப்பு கணக்கிற்கு வழங்கப்பட்டவை என்றால் சரிதான். மேற்படி ஐந்து காசோலைகளும் பணமாக்க செலுத்தப்பட்டபோது ஆசீர்வாதம் நாடார் சன்ஸ் நிறுவனத்தின் நடப்புக் கணக்கில் போதிய பணம் இல்லை என்ற காரணத்தால்தான் எங்கள் வங்கியால் திருப்பப்பட்டது என்றால் சரிதான். எங்கள் வங்கியில் மேற்படி காசோலைகள் எங்கள் வங்கியால் காலம் கடந்துவிட்டதால் செல்லா காசோலைகள் என கருதப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக காசோலைகளில் எந்த தேதி குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்த தேதியில்தான் அந்த காசோலை நடைமுறைக்கு வரும் என்றால் சரிதான். பொதுவாக வாடிக்கையாளர் ஒரு தொகையை ஒன்றுக்கு மேற்பட்ட காசோலைகள் மூலம் கொடுக்கக்கூடாது என்று எந்த ஒரு நடைமுறையும் கிடையாது என்றால் சரிதான். காசோலைகள்

எவ்வளவு தொகைக்கு நிரப்பப்பட வேண்டும் என்பது வாடிக்கையாளரின் விருப்பத்திற்குரியது என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** :-

காசோலைகள் பழைமையாக இருக்கும் பட்சத்தில் Referred to Drawer என காசோலைகளை திருப்பும் வழக்கம் உண்டு என்றால் சரிதான்.

**<u>மறு குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)</u>** :-

மேற்சொன்ன ஐந்து காசோலைகளும் Referred to Drawer என்று திருப்பப்படவில்லை என்றால் சரிதான். Funds insufficient என்றுதான் திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.